# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 548 /2009

Deposition of witness for: PW - 9

| | | | |
|---|---|---|---|
| Name | : Muralipaulkannan | Father/Husband Name: | Shanmugavelu |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : Doctor |
| Religion | : | Age | : |
| Date | : 10.12.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் தற்போது மேலூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை குடிமையியல் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.12.08ம் தேதி மேலூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது அன்று இரவு 07.30 மணியளவில் கொட்டகுடியை சேர்ந்த 50 வயது ராமசாமி என்பவர் தன்னை தெரிந்த 7 நபர்கள் அன்று மாலை 04.30 மணியளவில் அறிவாளை வைத்து கொட்டகுடி வயலில் தாக்கியதாகவும், அதன் பின்னர் அன்று மாலை 05.30 மணியளவில் அறிவாளால் தெரிந்த இரண்டு நபர்கள் தன்னுடைய வீட்டில் வைத்து தாக்கியதாக கூறி என்னிடம் சிகிச்சைக்காக வந்தார். அவரை நான் பரிசோதித்தபோது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது. 1) வயிற்றில் 5x2 செ.மீ. அளவிலும் மற்றும் ஆழமான நிலையில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. 2) இடதுகையில் 7x2 செ.மி அளவில் x ஆழமான நிலையில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. அவர் தனக்கு தலைவலி மற்றும் தலை சுற்றல் இருப்பதாக கூறினார். நான் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல சிசிக்சசைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். 20.12.08 முதல் 07.01.09ம் தேதி வரை சகிச்சை எடுத்துக்கொண்டபின்பு சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரின் பரிந்துரையின்படி அவருக்கு ஏற்பட்ட காயம் பெருங்காயம் என்று சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.5 ஆகும். அதே வழக்கில் காயம்பட்ட கொட்டக்குடியை சேர்ந்த 20 வயதுடைய ஆதி என்பவர் அன்று இரவு 07.40

மணியளவில் மேலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை தெரிந்த 7 நபர்கள் அன்று மாலை 05.30 மணியளவில் அறிவாளால் அவரது வீட்டில் வைத்து தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது. 1) தலையின் பின்பக்கத்தில் 5x2x1 செ.மீ. அளவில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது, மேலும் அவர் தனக்கு தலை சுற்றல் இருப்பதாக கூறினார். அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து அதன்பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு அவர் 20.12.08 முதல் 24.12.08 வரை சிகிச்சை எடுத்துக்கொண்டபின் சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரின் பரிந்துரையின்படி அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆகும். மேற்சொன்ன இரண்டு நபர்களுக்கும் அவர்களுக்கு காணப்பட்ட காயங்கள் அறிவாளால் தாக்கினால் ஏற்படி வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு. போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

காயம்பட்ட நபர்கள் தங்களை 7 நபர்கள் தாக்கியதாக சொன்னார்கள் என்றால் சரிதான். நான் முதலுதவி மட்டும்தான் செய்தேன் என்றால் சரிதான். அறிவாளால் வெட்டும்பொழுது நீண்ட காயம் எற்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்புண்டு. ஒரு இடத்தில் மட்டும் புள்ளி போன்று காயம் எற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு. மேற்சொன்ன இரு நபர்களும் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது கீழே விழும்போது கூர்மையான முள்ளில் விழுந்தால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்புண்டா என்றால் வாய்ப்புண்டு. காயம்பட்ட நபர்களுக்கு எடுத்து எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் ஆகியவற்றை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதலுதவி மட்டும் செய்ததால் அவர்களுக்கு எற்பட்ட காயத்தை பற்றி சான்று வழங்க இயலாது என்றால் சரியல்ல. 7 நபர்கள் சேர்ந்து தாக்கும்போது பல காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்புண்டு. நான் போலீசார் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.